23.03.2026
OS. No.334/2024
**வா.சா.1 –** திரு.முத்தப்பா, த/பெ.திரு.சபாபதி

(சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்)

**குறுக்கு விசாரணை :–**

நான் காவல்துறையில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து கடந்த 2015 ஆம் வருடம் பிப்ரவரி மாதத்தில் பணி நிறைவு பெற்றேன். இந்த வழக்கில் கண்ட முதல் பிரதிவாதி மற்றும் இரண்டாவது பிரதிவாதியின் முகவரியை நான் எவ்வாறு தெரிந்து கொண்டேன் என்றால் அவர்கள் முகவரி எனக்கு தெரியாது. நான் அவர்களை பார்த்ததும் கிடையாது. இந்த வழக்கில் முதல் பிரதிவாதி மற்றும் இரண்டாவது பிரதிவாதி முன்னிலை ஆகியிருக்கிறார்களா என்று நான் எனது வழக்கறிஞரிடம் கேட்கவில்லை. நான் மூன்றாம் பிரதிவாதி ஆகிய ஆந்திரா வங்கியில் இருந்து எவ்வாறு வாங்கினேன் என்றாலும் எந்த நாளிதழ் விளம்பரத்தை பார்த்தேன் என்றாலும் தெரியவில்லை. நான் மூன்றாம் பிரதிவாதி ஆகிய வங்கியை நம்பி தான் சொத்தை வாங்கினேன். மல்லிகா பட்டேல் என்பவர் இந்த வழக்கின் இரண்டாவது பிரதிவாதி ரமேஷ் பட்டேலுக்கு விற்பனை செய்த சொத்தை நான் கிரயம் வாங்கி இருக்கிறேன் என்றால் நான் வங்கியில் இருந்து தான் வாங்கினேன். நான் கிரையம் வாங்குவதற்கு முன்பாக வில்லங்கச் சான்று எதுவும் எடுத்து பார்க்கவில்லை. வங்கியில் இருந்த காரணத்தினால் நான் வில்லங்கம் பார்க்கவில்லை. அவர் எவ்வளவு பணம் கடன் வாங்கி இருந்தார் எவ்வளவு பணத்திற்காக சொத்து ஏலத்திற்கு

வந்தது என்ற விவரங்கள் எனக்கு தெரியாது. நான் ஒரு புரோக்கர் மூலம் விற்பனை செய்வதற்கு சொல்லி வைத்திருந்தேன். அப்போது பார்த்ததில் சொத்தில் வில்லங்கம் இருப்பதும் வேறு நபர் சொத்து என்பதும் தெரிய வந்தது. நான் அதன் பிறகாவது வில்லங்கச் சான்று எடுத்து பார்த்தேனா என்றால் இல்லை. நான் வங்கியில் உள்ள மேலாளரை நேரில் அணுகி கேட்டேன். அவரது பெயர் தெரியுமா என்றால் மூன்று மேலாளர்கள் மாறிவிட்டார்கள். நான் வங்கிக்கு வில்லங்கம் இருப்பதாக கூறுகிறார்களே என்று குறிப்பிட்டு அறிவிப்பு எதுவும் அனுப்பினேனா என்றால் இல்லை. நேரில் தான் சென்று கேட்டேன். நான் சொத்தில் வில்லங்கம் இருக்கிறது என்று இந்த வழக்கில் கண்ட முதல் பிரதிவாதி மற்றும் இரண்டாவது பிரதிவாதியை அணுகி கேட்டேனா என்றால் இல்லை. நான் 2024 ஆம் வருடத்தில் ஒரு நாள் நவல்பட்டு காவல் நிலையத்தில் சென்று புகார் கொடுத்தபோது அவர்கள் சிவில் சம்பந்தப்பட்ட பிரச்சனை என்று புகாரை வாங்க மறுத்து நீதிமன்றத்தின் பரிகாரம் தேடிக்கொள்ள சொல்லிவிட்டார்கள். நான் கிரையம் வாங்கிய பிறகு என் பெயருக்கு பட்டா மாறுதல் செய்ய ஏதாவது நடவடிக்கை எடுத்தேனா என்றால் இல்லை. நான் இரண்டு ஏக்கர் கிரையம் வாங்கியதில் ஒரு ஏக்கர் விற்பனை செய்வதற்கு திருவெறும்பூரை சேர்ந்த புரோக்கர் மருதை என்பவரை தொடர்பு கொண்டேன். அவர்தான் வினித் பட்டேல் என்பவரை அழைத்து வந்தார். அந்த வினித் பட்டேல் என்பவரும் இந்த வழக்கில் கண்ட முதல் பிரதிவாதியும் இரண்டாவது பிரதிவாதியும் உறவினர்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வினித் பட்டேல் என்னிடம் ரூபாய்

1000 மட்டும் முன்புறமாக கொடுத்து விட்டு சென்றார். அவருடன் ஒப்பந்தம் பிறப்பிக்கவில்லை. எனக்கு வினித் பட்டேல் விலாசம் தெரியாது. மல்லிகா பட்டேல் பெயரில் உள்ள பத்திரமானது ஆள்மாறட்டம் செய்து போலியாக பிறப்பிக்கப்பட்ட பத்திரம் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அந்த பத்திரங்கள் அனைத்தும் போலியானவை என்று மாவட்ட பதிவாளரும் மாவட்ட வருவாய் அலுவலரும் ரத்து செய்து உத்தரவு பிறப்பித்து இருக்கிறார்கள் என்றால் நினைவில்லை. மல்லிகா பட்டேல் மீது நில அபகரிப்பு தடுப்பு தனிப்பிரிவில் குற்ற எண்.12/2019 என ஒரு வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அதன் அடிப்படையில் அவர்கள் மீது ஆண்டு பட்டிகை வழக்கு எண் 297/2019 என ஒரு வழக்கு நிலுவையில் இருந்து வருகிறது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் ரூபாய் 20,10,000/-க்கு அந்த சொத்தை ஏலத்திற்கு எடுத்தேன். என்னுடன் வேறு யாரும் ஏலத்தில் கலந்து கொள்ளவில்லை. அந்த சொத்தின் வழிகாட்டி மதிப்பு எவ்வளவு என்று பார்த்தேனா என்றால் பார்த்தேன். தற்போது நினைவில்லை. நான் வழிகாட்டி மதிப்பை பார்வையிட்டதற்கு கையில் ஆவணம் ஏதாவது இருக்கிறதா என்றால் இல்லை. நானும் இந்த வழக்கில் கண்ட முதல் பிரதிவாதியும் இரண்டாவது பிரதிவாதியும் வங்கியும் கூட்டு சேர்ந்து பெயரளவில் என் பெயருக்கு ஒரு ஏலம் நடத்தியதாக ஒரு மோசடியான கிரைய பத்திரத்தை உருவாக்கி இருக்கிறோம் என்று சொன்னால் சரியல்ல. அதனால்தான் நான் வங்கி மீது பணத்தை திருப்பி கொடுக்க கேட்டு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. இந்த

VeritasDoc

வழக்கில் கண்ட நான்காம் பிரதிவாதி தாரணி பேரில் உள்ள பத்திரம் எதையும் நான் பார்க்கவில்லை. அவரது அப்பா நடராஜன் பெயரில் உள்ள பத்திரத்தையும் நான் பார்க்கவில்லை. நான் அவர்கள் ஆவணத்தை பார்வையிடாமல் அவை போலியான ஆவணங்கள் என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் இந்த வழக்கில் கண்ட முதல் பிரதிவாதி மற்றும் இரண்டாவது பிரதிவாதியுடன் கூட்டுச் சேர்ந்து மோசடி செயலில் ஈடுபட்ட காரணத்தினால் மூன்றாம் பிரதிவாதியான வங்கி வருகை இல்லா தரப்பினராக இந்த வழக்கில் இருந்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. முதல் பிரதிவாதி மீது மோசடி ஆவணங்கள் தொடர்பான குற்ற வழக்குகள் நிலுவையில் இருக்கக்கூடிய விவரம் எனக்கு நன்கு தெரியும் என்றும், வழக்கிற்காக எனக்கு தெரியாது என்றும் மறுக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் நான் குறிப்பிட்டு இருக்கக்கூடிய வழக்கு மூலம் உண்மை கிடையாது என்றால் சரியல்ல. வழக்கில் நான் கேட்டிருக்கக்கூடிய பரிகாரம் எதுவும் எனக்குக் கிடைக்கத் தக்கதாக இல்லை என்று சொன்னால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை:–</u>** இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்கறிஞர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு கைரேகை/கையொப்பம் செய்யப்பட்டது.

(ஒம்.).XXXXX,
முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.